දුරකථන / தொலைபேசி / Telephone

අමාත්‍ය / அமைச்சர் / Minister — Tel: 011 2688776, Fax: 011 2695292

නියෝජ්‍ය අමාත්‍ය / பிரதி அமைச்சர் / Deputy Minister — Tel: 011 2685268, Fax: 011 2682610

ලේකම් / செயலாளர் / Secretary — Tel: 011 2696679, Fax: 011 2671355

කාර්යාලය / அலுவலகம் / Office — Tel: 011 2694486, 011 2697133, Tel: 011 2697721, 011 2691378

**උසස් අධ්‍යාපන අමාත්‍යාංශය**

**உயர் கல்வி அமைச்சு**

**Ministry of Higher Education**

18, වෝඩ් පෙදෙස, කොළඹ 7

18, வோட் பிளேஸ், கொழும்பு 7

18, Ward Place, Colombo 7


මගේ අංකය / எனது இல. / My No. — HE/AD/FL/2013

ඔබේ අංකය / உமது இல. / Your No. — C1

දිනය / திகதி / Date — 2013.12.03

CHAMARA

அன்புள்ள மாணவ மாணவியருக்கு,

**<u>“தலைமைத்துவ ஆற்றல் மற்றும் சாதகமான சிந்தனை (Positive Thinking) விருத்தி”</u>**
**<u>பற்றிய 03 வார பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்</u>**
**<u>2013 டிசம்பர் 22 ஆம் திகதி தொடக்கம் 2014 ஜனவரி 10 ஆம் திகதி வரை</u>**

2012 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடத்தப்பட்ட கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தர பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய உயர் கல்வியின் பொருட்டு பல்கலைக்கழகங்களுக்குப் பிரவேசிக்கும் அனைத்து மாணவ, மாணவியரையும் எதிர்கால இலங்கையின் தலைவர்களாக்க உதவும் வகையில் **“தலைமைத்துவ ஆற்றல் மற்றும் சாதகமான சிந்தனை விருத்தி”** பற்றிய நிகழ்ச்சித்திட்டத்தை இம்முறையும் நடாத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

02. உயர் கல்வி அமைச்சு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் பாதுகாப்பு அமைச்சு என்பன ஒன்றிணைந்து ஏற்பாடு செய்யும் இப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டம், மாதுறுஓயாவில் அமைந்துள்ள இராணுவ பயிற்சி நிலையத்தில், **<u>2013 டிசம்பர் 22 ஆம் திகதி தொடக்கம் 2014 ஜனவரி 10 ஆம் திகதி வரை</u>** கலந்துகொள்வதற்கு நீர் தெரிவுசெய்யப்பட்டுள்ளீர் என்பதனை அறியத்தருகின்றேன்.

| |
|---|
| **வீதி விபரம்: பொலநறுவை - கதுருவெல - அரலகம்வில - அருணபுர - கந்தேகம – ஏ. ரீ. எஸ். சந்தி - மாதுறுஓயா** <br><br> **(கதுறுவெலயில் இருந்து பயிற்சி நிலையத்திற்கு உள்ள தூரம் ஏறத்தாழ 70 கிலோமீட்டர் ஆகும்)** |

PDF compression, OCR, web optimization using a watermarked evaluation copy of CVISION PDFCompressor

03. எனவே, இந்தப் பாடநெறியை ஆரம்பிப்பதற்கு முந்திய தினத்தில், அதாவது 2013.12.21 ஆம் திகதிபி ப 5.30 மணிக்கு முன்னர் குறித்த பயிற்சி நிலையத்தின் பொறுப்பதிகாரியிடம் நீங்கள் தவறாது சமுகமளித்தல் வேண்டும். அண்மையிலுள்ள நகரிலிருந்து பயிற்சி நிலையத்தை அடையக்கூடிய குறுகிய வழி பற்றிய விபரம் 02 ஆம் பந்தியின் இறுதியில் காட்டப்பட்டுள்ளதுடன், அந்தப் பயிற்சி நிலையத்திற்குத் தேவையான அத்தியாவசிய தகவல்களும் இக்கடிதத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. (தயவு செய்து இணைப்பு 1 இனைப் பார்க்கவும்)

04. இப்பயிற்சி நிகழ்ச்சி திட்டம் **2013 டிசம்பர் 22 ஆம் திகதி தொடக்கம் 2014 ஜனவரி 10 ஆம் திகதி வரை 03 வார காலம்** குறிப்பிட்ட பயிற்சி நிலையங்களில் வதிவிட முறையில் நடைபெற இருப்பதால் பயிற்சிக்காக சமுகமளிக்கும்போது உங்களுடைய தனிப்பட்ட பொருட்களுக்கு மேலதிகமாக பயிற்சிப் பாடநெறியைத் தொடர்வதற்குத் தேவையான இக்கடிதத்தின் 04 ஆம் பக்கத்தில் காட்டப்பட்டுள்ள பொருட்களையும் கொண்டுவருதல் வேண்டும்.

05. தங்குமிட வசதி, உணவு, பாடநெறிக்குத் தேவையான கையேடு,**"போஷாக்கு வழிகாட்டி"**மற்றும் **"புதிய மாணவர் பகிடி வதை"**எனும் பெறுமதிவாய்ந்த நூல், உடற்பயிற்சிக்கு அவசியமான இரண்டு T – Shirts, இரண்டு Track Bottoms மற்றும் தொப்பி (Cap) போன்றவை உயர் கல்வி அமைச்சினால் இலவசமாக வழங்கப்படும். பயிற்சிக்காக சமுகமளிக்கும் சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட நிலையத்தின் பொறுப்பதிகாரியிடமிருந்து அவற்றை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

06. உயர் கல்வியைப் பயில்வதற்குத் தயாராகும் அனைத்து மாணவ, மாணவியரும் இப்பாடநெறியில் பங்குபற்றுதல் மிகவும் முக்கியமாகும். அவ்வாறு பங்குபற்ற இயலாத (இருதய நோய், சிறுநீரக நோய், ஏனைய கடும் நோய்கள், தொற்று நோய்கள், அங்கவீனம்) மாணவ, மாணவியர் இருப்பின் அதை உறுதி செய்யும் சகல மருத்துவ அறிக்கைகளுடன் 2013 டிசம்பர் மாதம் 14 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், உயர் கல்வி அமைச்சு, இல. 18, வோட் பிளேஸ், கொழும்பு 07 என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு அல்லது கீழே குறிப்பிட்ட இலக்கங்களுக்கு பெக்ஸ் மூலம் அறியத்தருதல் வேண்டும். இப்பயிற்சியில் பங்கேற்க விருப்பமுடைய, ஆனாலும் நாட்பட்ட அல்லது வேறும் நோய்களால் பீடிக்கப்பட்டிருக்கும் மாணவ, மாணவியர் இருப்பின் அது பற்றி உறுதி செய்யப்பட்ட மருத்துவ அறிக்கை சகிதம் குறிப்பிட்ட பயிற்சி நிலையத்திற்கு உரிய தினத்தில் சமுகமளித்தல் வேண்டும். அந்நிலையத்திற்கு இணைக்கப்பட்டிருக்கும் வைத்தியரால் அத்தகைய அறிக்கை அவதானிக்கப்பட்டு தேவையான மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்படும். மருத்துவ வசதிகள் அவசியமான மாணவ, மாணவியர்களுக்கு அவற்றை குறிப்பிட்ட நிலையத்தில் பெற்றுக்கொள்வதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

07. பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் நடைபெறும் காலப்பகுதியில் மாணவர்களுக்கு மற்றும் மாணவியர்களுக்கு தங்குமிட வசதிகள் வேறு வேறாக அமைந்துள்ள தங்குமிடங்களில் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆண்களுக்கான தங்குமிடங்களின் முகாமை நடவடிக்கைகள் ஆண் உத்தியோகத்தர்களினாலும் பெண்களுக்கான தங்குமிடங்களின் முகாமை நடவடிக்கைகள் பெண் உத்தியோகத்தர்களினாலும் மேற்கொள்ளப்படும்.

08. பயிற்சியின் பொருட்டு குறிப்பிட்ட பயிற்சி நிலையத்திற்கு சமுகமளிக்கையில் மாணவ, மாணவியர் கட்டாயமாக தமது பெற்றோர் அல்லது பாதுகாவலருடன் வரவேண்டிய அவசியமில்லை. இப்பயிற்சிக்கு வரும்பொழுது பெறுமதிவாய்ந்த பொருட்கள் மற்றும் உபகரணங்களைக் கொண்டுவருவதைத் தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். உடற்பயிற்சி வகுப்புகள், கலந்துரையாடல்கள் மற்றும் கூட்டு செயற்பாடுகள் நடைபெறும் காலப் பகுதியில் கையடக்க தொலைபேசிகள் பாவிப்பதற்கு இடமளிக்கப்படமாட்டாது. அந்த செயற்பாடுகள் இடம்பெறாத சந்தர்ப்பங்களில் கையடக்கத் தொலைபேசிகளைப் பாவிப்பதில் தடை ஏதும் இல்லை.



PDF compression, OCR, web optimization using a watermarked evaluation copy of CVISION PDFCompressor

09. இலங்கையின் எதிர்கால தொலைநோக்கு மற்றும் உலகளாவிய மாற்றங்கள், மூலோபாய ரீதியான வாழ்க்கைத் திட்டத்தை வகுத்தல் மற்றும் நீண்ட கால குறிக்கோள்களை நோக்கிய அணுகுமுறை, தேகப்பயிற்சி, முதலுதவி, தலைமைத்துவப் பண்பு மற்றும் தலைமைத்துவம், உளவியல், பொதுச் சட்டம், சமூக ரீதியான பழக்க வழக்கங்கள், தங்குமிடங்களில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு முறைகள், தனிப்பட்ட தோற்றம், போஷாக்கு மற்றும் பொழுது போக்குகள் உட்பட காலத்துக்குத் தேவையான முக்கிய விடயங்கள் இப்பாடநெறியில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளதோடு, தகைமைவாய்ந்த வளவாளர்களால் அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்கள் நெறிப்படுத்தப்படும். பயிற்சியை வெற்றிகரமாக நிறைவேற்றிய பின்னர் அதனை உறுதிப்படுத்தும் சான்றிதழொன்று உங்களுக்கு விநியோகிக்கப்படும். இப் பயிற்சிநெறியில் 80% இனை விடவும் குறைவான வரவைக் கொண்ட மாணவ, மாணவியருக்கு அதனை வெற்றிகரமாக பூர்த்தி செய்தமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ் வழங்கப்பட மாட்டாது.

10. இப்பயிற்சியைப் பூர்த்தி செய்துகொள்ளவதன் மூலம் உங்களுடைய எதிர்கால வாழ்க்கையை வெற்றிகரமாக அமைத்துக்கொள்ள முடியுமென நம்புவதோடு, உயர் தர மாணவன்.·. மாணவி என்ற மனோநிலையிலிருந்து விடுபட்டு, ஏற்றுக்கொள்ள முடியாத பாரம்பரிய மரபுகளில் இருந்து விடுபட்டு தர்க்க ரீதியானதும், விஞ்ஞான அடிப்படையிலுமான தீர்மானங்களை எடுப்பதற்கேதுவான தலைமைத்துவப் பண்புகளைக் கொண்ட பிரசையொருவராவதற்கு அவசியமான பின்னணியொன்று இதன்மூலம் உருவாகின்றது. தலைமைத்துவ பயிற்சியைப் பெற்றுக்கொள்வது மாத்திரம் பல்கலைக்கழகப் பிரவேசத்திற்கு தேவையான தகைமையைப் பூர்த்தி செய்ததாகக் கருதப்பட மாட்டாததுடன் பல்கலைக்கழகப் பிரவேசத்திற்குத் தேவையான ஏனைய நிபந்தனைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

11. இலங்கையின் எதிர்காலத் தலைவனாக அல்லது தலைவியாக வருவதற்கு எதிர்பார்க்கும் உங்களுக்கு இப்பாடநெறியைப் பின்பற்றுவதன் மூலம் விருத்தி செய்துகொள்ளப்படும் அறிவு, மனோபாவம், எண்ணப்பாங்கு மற்றும் திறன்களின் ஊடே அத்தகைய எதிர்பார்ப்பை ஈடேற்றிக்கொள்ளும் ஆற்றல் உருவாக வேண்டுமென நான் மனப்பூர்வமாக பிரார்த்திக்கின்றேன்.

இப்படிக்கு உண்மையுள்ள,

**ஒப்பம்/ கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன**
செயலாளர்,
உயர் கல்வி அமைச்சு

**கவனிக்க வேண்டியவை:-**

- ☆ பயிற்சி நிலையங்களுக்கு பயிற்சிக்காக சமுகமளிக்கையில் உங்களுடைய தேசிய அடையாள அட்டையுடன் இக்கடிதத்தையும் கட்டாயமாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.
- ☆ தலைமைத்துவப் பயிற்சி பற்றிய அனைத்து தகவல்களையும் கொண்ட இணையத்தளம் www.leadership.mohe.lk ஆகும்.
- ☆ இது சம்பந்தமாக அவசிய எந்தவொரு தகவலையும் 04 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் செயற்பாட்டுக் கருமபீடத்தில் பெற்றுக்கொள்ள இயலும்.



PDF compression, OCR, web optimization using a watermarked evaluation copy of CVISION PDFCompressor

**தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உயர் கல்வி அமைச்சின் உத்தியோகத்தர்களின் விபரங்கள்.**

| உத்தியோகத்தரின் பெயர் | தொலைபேசி இலக்கம் | கையடக்க தொலைபேசி இலக்கம் |
|---|---|---|
| கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன, செயலாளர் | 011-2696679 | 0773823261 |
| திரு. பீ. ரணேபுர, மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) | 011-2688621 | 0718030543 |
| திரு. பீ. ஜீ. ஜயசிங்க, மேலதிக செயலாளர் (நிர்வாகம் மற்றும் நிதி) | 011-2697665 | 0711329998 |
| திரு. கீர்த்தி மாவல்லகே, சிரேʻட ஆலோசகர் (மாணவர் அலுவல்கள்) | 011-2687510 | 0777862230 |
| திரு. சுனில் குணவர்தன, ஊடக செயலாளர்/ சிரேʻட ஆலோசகர் (விளையாட்டுத்துறை மற்றும் திறன் விருத்தி) | 011-2688810 | 0712768948 |
| திரு.வை.எல்.எம் நவவி, சிரேʻட உதவிச் செயலாளர்(விசேடமாக தமிழ் மொழி மூல மாணவர்களுக்கு) | 011-2691527 | 0777253772 |
| திரு. ஜீ. எம். ஆர்.டீ. அபொன்சு, பணிப்பாளர் (திட்டமிடல்) | 011-2693462 | 0718320828 |
| திருமதி ஏ. எஸ். பீ. வீரசூரிய, உதவி செயலாளர் (நிர்வாகம்) | 011-2698338 | 0775249188 |
| திரு. எச். டி. எஸ். என். ஹெட்டிகே, உதவி செயலாளர் (தாபனம்) | 011-2694759 | 0777446847 |
| திருமதி ஜே.விஜேசிங்ஹ, சிரேʻட உதவிச் செயலாளர்,ப.க.மா.ஆ.குழு | - | 0711357114 |
| செல்வி எஸ்.ஏ.ரீ.சொனாலி | - | 0711329995 |
| செல்வி கே.ஹங்ஸமாலி சில்வா | - | 0711341114 |

- ❖ உயர் கல்வி அமைச்சின் Hot Line இலக்கம் 1918 ஆகும்
- ❖ செயட்பாட்டுக் கரும பீடத்தினை தொடர்புகொள்ள முடியுமான தொலைபேசி இலக்கம்011-2435306 ஆகும்.
- ❖ பயிற்சி நிலையங்களின் தொ.பே.இலக்கங்கள் இணைப்பு 1 இல் காட்டப்பட்டுள்ளது.

**பயிற்சிக்காக சமுகமளிக்கும் போது கொண்டுவரவேண்டிய பொருட்கள்**

| | மாணவ, மாணவியர் பொதுவாகக் கொண்டுவர வேண்டியவை | மாணவர்கள் விசேடமாக | மாணவிகள் விசேடமாக |
|---|---|---|---|
| 01. | தேசிய அடையாள அட்டை | 1. நீளக்கை சேர்ட் 02<br>2. கட்டைக்கை சேர்ட் 02<br>3. நீளக் காற்சட்டைகள் 02<br>4. கட்டைக் காற்சட்டை 02<br>5. காற்சட்டையின் நிறத்துக்குப் பொருத்தமான சப்பாத்து 01சோடி மேஸ் 02 சோடி<br>6. உடைக்கு பொருந்தும் ரை (Tie) 02<br>7. காற்சட்டை நிறத்திற்குப் பொருந்தும் பெல்ற் 01 | 1. சாரிகள் 02 (பொருத்தமான சாரிப் பின் போன்றவை சகிதம்)<br>2. சாரிக்கு பொருத்தமான பாதணி 01<br>3. ரீ சேர்ட் ∴ டெனிம் அவசியமானவாறு<br>4. நீளக் காற்சட்டை ∴ சட்டை மேற்சட்டை அவசியமானவாறு<br>5. குளிப்பதற்குத் தேவையான ஆடைகள் |
| 02. | பாஸ்போட் அளவு வர்ண புகைப்படங்கள் 04 | | |
| 03. | கன்வஸ் சப்பாத்து 02 சோடி (குறைந்தது ஒரு சோடி) | | |
| 04. | இறப்பர் செருப்பு 01 சோடி | | |
| 05. | படுக்கை உடைகள் | | |
| 06. | தலையணை உறை வெள்ளை 02 | | |
| 07. | படுக்கை விரிப்பு வெள்ளை 02 | | |
| 08. | துவாய் 01 | | |
| 09. | உள்ளாடைகள் அவசியமானவாறு | | |
| 10. | சவர்க்காரம், பற்பசை, பற்தூரிகை, சுத்தம்பேணல் பொருட்கள் அவசியமானவாறு | | |
| 11. | 80 பக்க அப்பியாசப் புத்தகங்கள் 02 | | |
| 12. | பைல் கவர், பேனா, பென்சில் அவசியமானவாறு | | |
| 13. | பீங்கான், கோப்பை 01 வீதம் | | |
| 14. | பூட்டிவைக்கக்கூடிய சூட்கேஸ் ஒன்று அல்லது Bag 01 | | |
| 15 | கன்வஸ் மற்றும் ஏனைய சப்பாத்து பொலிஸ் | | |
| 16. | தலையணை ஒன்று நிலையத்தினால் வழங்கப்படும் (அவசியமெனின் தலையணை ஒன்றைக் கொண்டுவரலாம்) | | |
| 17. | தற்பொழுது பாவிக்கும் மருந்துகளை கொண்டுவருதல் வேண்டும். | | |

PDF compression, OCR, web optimization using a watermarked evaluation copy of CVISION PDFCompressor

ANNEX I/ ඇමුණුම 1

# DETAILS OF TRAINING CENTERS

| NO | NAME OF THE TRAINING CENTER | NAME OF THE COMMADANT | CONTACT NUMBER |
|---|---|---|---|
| C1 | Army Training School, Army Camp, Maduruoya | Brigadier H H A S P K Senarathna RSP psc | 0273279100<br>0275681001 |
| C2 | Infantry Training Centre, Army Camp, Minneriya | Brigadier G J L Waduge RWP RSP | 0272246325 |
| C3 | Combat Training School, Army Ampara | Brigadier S S Waduge USP | 0632222057 |
| C6 | Marksmanship and Sniper Training School Home of the Snipers, Engineer Ridge, Army Camp, Diyatalawa | Colonel D S D Welikala WWV RWP RSP | 0572229159<br>0572229980 |
| C7 | Army School of Logistics, Army Camp, Clappenburg, Trincomalee | Brigadier M H P Mihindukulasuriya USP psc Lsc | 0262233321 |
| C8 | Armoured Corps Training Centre, Army Camp, Kawarakkulama, Galkulama, Anuradhapura | Major W M I U B Weerasekara | 0253853071 |
| C9 | School of Artillery, Army Camp, Minneriya, | Colonel M P Karunarathne IG | 0272246310 |
| C10 | Sri Lanka School of Military Engineering, Thunkama, Embilipitiya | Lieutenant Colonel D P Jayasinghe RSP | 0472230528 |
| C11 | School of Signal, Army Camp, Boowelikada, Kandy | Lieutenant Colonel R Elvitigala | 0812204975 |
| C12 | Regemental Training School SLLI, Army Camp, Boossa | Major A M M Gunasekara | 0912234328 |
| C13 | Engineer Services Trade School, Andarawewa, Galayaya, Talawa | Major N W P S M Perera | 0253853072<br>0253851183 |
| C14 | Army Service Corps School, Tisawewa Army Camp, Anuradhapura | Lieutenant Colonel W W U G Gajaweera | 0252223975 |
| C15 | School of Ordnance, Army Camp, Dombagoda, Horana | Lieutenant Colonel W M S N Wijekoon ATO | 0342251882 |
| C16 | School of Electrical and Mechanical Engineering, Army Camp, Gannoruwa, Peradeniya | Lieutenant Colonel S A Pathirana RSP | 0812388385 |
| C17 | School of Military Police, Sudugal Kanda, Gerithale | Lieutenant Colonel A M R Abeysinghe | 0272247941 |
| C18 | Sri lanka Army General Services Corps Trade School, Padalangala, Kuttigala | Major P R Samaraweera | 0473489221 |
| C19 | Sri Lanka Navy "Nipuna" Training Center, Boossa | Commadore S M D K Samaraweera RSP USP | 0912267134<br>0112218411 |
| C20 | Sri Lanka Navy "Shilpa" Training Center, Thalathu oya, Kandy | Captain A B Danapala USP | 0113137005<br>0113818112 |
| C21 | Sri Lanka Navy "Shiksha" Training Center, Poonawa, Medawachchiya | Commadore U I Serasinghe WWV RSP USP | 0112211501<br>0113818125 |
| C22 | Sri Lanka Air Force School, Diyathalawa | Group Captain W W P D Fernando RSP | 0113110473<br>0572229064 |
| C25 | Sri Lanka Air Force Acedamy, Chinabay, Tricomalee | Air Commander H M S K B Kotakadeniya | 0262233272/73 |

PDF compression, OCR, web optimization using a watermarked evaluation copy of CVISION PDFCompressor